**செய்தி வெளியீடு எண்: 565** **நாள்:04.09.2019**

**செய்தி வெளியீடு**

கப்பலோட்டிய தமிழன் வ. உ. சிதம்பரனார் அவர்களின் 148ஆவது பிறந்தநாளை முன்னிட்டு தமிழக அரசின் சார்பில், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், சென்னை, இராஜாஜி சாலை, துறைமுக வளாகத்தில் அமைந்துள்ள அன்னாரின் திருவுருவச் சிலைக்கு கீழ் அலங்கரித்து வைக்கப்படவுள்ள திருவுருவப் படத்திற்கு நாளை(5.9.2019) காலை 10.00 மணியளவில் மலர் தூவி மரியாதை செலுத்தவுள்ளார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் செயல்படும் தமிழக அரசு, தமிழ்ச் சான்றோர்கள், விடுதலைப் போராட்ட தியாகிகள் மற்றும் தலைவர்கள் ஆகியோரை பெருமைப்படுத்தும் வகையில், அன்னார்களது பிறந்தநாளன்று தமிழ்நாடு அரசின் சார்பில் ஆண்டுதோறும் மாலை அணிவித்து, மரியாதை செலுத்தி, விழா கொண்டாடப்பட்டு வருகிறது. அந்த வகையில், கப்பலோட்டிய தமிழன் வ. உ. சிதம்பரனார் அவர்களின் பிறந்த தினமான செப்டம்பர் 5ஆம் நாள், ஒவ்வொரு ஆண்டும் அரசு விழாவாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

வ. உ. சிதம்பரனார் அவர்கள் தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் எனும் ஊரில் உலகநாதன் பிள்ளை– பார்வதி அம்மையார் தம்பதியருக்கு மூத்த மகனாக 5.9.1872 அன்று பிறந்தார். அடிப்படைக் கல்வியை ஒட்டப்பிடாரத்திலும், உயர்நிலைக் கல்வியை தூத்துக்குடியிலும், சட்டக்கல்வியைத் திருச்சியிலும் பயின்று, 1895ஆம் ஆண்டு வழக்கறிஞரானார்.

சென்னையில் விவேகானந்தர் மடத்தைச் சேர்ந்த இராமகிருஷ்ணானந்தர் அவர்களின் சந்திப்பு வ.உ.சி அவர்கள் உள்ளத்தில் விடுதலைக் கனலை ஓங்கச் செய்தது. அதன்பிறகே அவர் வாழ்வில் புது அத்தியாயம் தொடங்கியது. பாலகங்காதர திலகர் அவர்களின் விடுதலைப் போராட்டத்தில் மனதைப் பறிகொடுத்து, 1898ஆம் ஆண்டு இந்திய தேசிய காங்கிரஸில் உறுப்பினராகி, சுதந்திரப் போராட்டத்திற்காக பாடுபட்டார்.

வ. உ. சிதம்பரனார் அவர்கள், 1906ஆம் ஆண்டு ‘‘சுதேசி நாவாய்ச் சங்கம்’’ என்கிற சங்கத்தை நிறுவி அதன் செயலாளர் ஆனார். அந்தக் கம்பெனியின் சார்பில் எஸ்.எஸ்.காலியா, எஸ்.எஸ்.லாவோ ஆகிய இரண்டு கப்பல்களை வாங்கி தூத்துக்குடி துறைமுகத்தில் இருந்து இயக்கத் தொடங்கினார். அதனால் ‘‘கப்பலோட்டிய தமிழன்’’ என்று அனைவராலும் அழைக்கப்பட்டார். வ. உ. சிதம்பரனார் அவர்களின் சுதந்திரப் போராட்ட நடவடிக்கைகளால் எரிச்சலடைந்திருந்த ஆங்கிலேய அரசு, 1908ஆம் ஆண்டு மார்ச் 9ஆம் நாள் விபின் சந்திரபாலர் விடுதலைக் கொண்டாட்டத்தின்போது அரசாங்கத்தை அவமதித்ததாகவும், சுதந்திரத்திற்காக பொதுமக்களைத் தூண்டியதாகவும் வ. உ. சிதம்பரனார்

அவர்கள் மேல் வழக்குப்பதிவு செய்து, இரட்டை ஆயுள் தண்டனை விதித்தது. அந்தத் தீர்ப்பினை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டது. முறையீட்டின்போது வ. உ. சிதம்பரனார் அவர்களை அந்தமான் அனுப்ப இயலாது என்பதால் கோவை சிறையில் அடைக்கப்பட்டார். அச்சிறையில் வ.உ.சி அவர்கள் செக்கிழுக்க வைக்கப்பட்டதால் ''செக்கிழுத்த செம்மல்'' என்ற பெயரைப் பெற்றார். 18.11.1936 அன்று வ. உ. சிதம்பரனார் அவர்கள் உயிர் நீத்தார்.

வ. உ. சிதம்பரனார் அவர்கள் நாட்டின் விடுதலைக்காக கோவை சிறையில் இழுத்த இரண்டு செக்குகளில் ஒன்று கோவை சிறையிலும், மற்றொன்று சென்னை, கிண்டி, காந்தி மண்டப வளாகத்திலும் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

திருநெல்வேலி மாவட்டத்தில் கப்பலோட்டிய தமிழன் வ. உ. சிதம்பரனார் மணிமண்டபம் ரூ. 75 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களால் 23.06.2005 அன்று திறந்துவைக்கப்பட்டது.

தமிழக அரசின் சார்பில், வ. உ. சிதம்பரனார் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு சென்னை, இராஜாஜி சாலை, துறைமுக வளாகத்தில் அமைந்துள்ள அன்னாரின் திருவுருவச் சிலைக்கு கீழ் அலங்கரித்து வைக்கப்படவுள்ள திருவுருவப் படத்திற்கு நாளை(5.9.2019) காலை 10.00 மணியளவில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், வாரியத்தலைவர்கள், கூட்டுறவு சங்கங்களின் பிரதிநிதிகள் மற்றும் சீர்மிகு பெருமக்கள் மலர் தூவி மரியாதை செலுத்துவார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**